1979 நவம்பர் 2]

திருப்புவனம் பேரூராட்சியில் குடிநீர்க் குழாய்கள்

* **வினா எண். 68—திரு. வ. மு. சுப்பிரமணியன்** : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்புவனம் பேரூராட்சியில் குடிநீர் பற்றாக்குறையை நீக்க குழாய்களை அதிகப்படுத்த அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : திட்டம் ஏதும் இல்லை.

திரு. ஓ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, திருப்புவனம் பேரூராட்சியில் குடிநீர் பற்றாக்குறை இருக்கிறது. அருப்புக்கோட்டை வைகை ஆற்றிலிருந்து இராட்சச பம்பு மூலமாக தண்ணீர் இறைக்கின்ற காரணத்தினால், திருப்புவனத்திலுள்ள குழாய்கள் வற்றிப்போய் விடுகின்றன. அதற்கு மாற்று நடவடிக்கை என்ன எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இது மூல கேள்விக்கு தொடர்பற்றது.

செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, திருப்புவனம் வைகைக் கரையில் இருப்பதனால், திருப்புவனத்தில் தண்ணீர் இல்லாத ஒரு அபாய நிலைமை இருக்கிறது. இதேமாதிரி திருப்புவனத்திற்கும் தண்ணீர் வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்.

* **வினா எண். 69—திரு. என். வரதராஜன்** : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978 ஜனவரி முதல் ஜூன் மாதம் வரையுள்ள 6 மாத காலத்தில் புதிய குடிநீர்க் குழாய் இணைப்பின் மூலம் எத்தனை கிராமங்களுக்கு வசதி செய்யப்பட்டது, மாவட்ட வாரியாக?

(ஆ) இன்னும் எத்தனை கிராமங்களுக்கு குடிநீர் வசதிகள் செய்யப்பட வேண்டியுள்ளது?